DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I COURT, ERODE

C.C.No.40/2016

PROSECUTION WITNESS L.W.13/P.W.5

| | | | |
|---|---|---|---|
| பெயர் | து. கண்ணன் | தகப்பனார் பெயர் | துரைபாண்டி |
| கிராமம் | ஆட்டையாம்பட்டி | ஊர் | ஈரோடு |
| தொழில் | காவல் ஆய்வாளர் | வயது | 49 |

**எதிரி ஆஜர்**

Solemnly affirmed in accordance with the provisions of ACT X of 1873 of the day of 20.11.2025

**முதல் விசாரணை**

1) நான் தற்சமயம் சேலம் மாநகரம் ஆட்டையாம்பட்டி காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். தலைமை காவலர் ராமசந்திரனின் கையொப்பம் எனக்கு பரிட்சியம் என்பதால் அவருக்காக ஆவணங்களின் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கிறேன்.

2) கடந்த 31.01.2016 ம் தேதி நான் ஈரோடு தாலுக்கா காவல் நிலைய ஆய்வாளராக பணிபுரிந்தபோது முருகன் என்பவர் நிலையம் ஆஜராகி அலுவலலில் இருந்த தலைமை காவலர் 1910 திரு. ராமசந்திரன் என்பவரிடம் கொடுத்த புகாரின் பேரில் நிலைய குற்ற எண் 45/2016 சட்டப்பிரிவுகள் 279, 304(A) இதச பிரிவின் கீழ் வழக்கு பதிவு செய்து முதல் தகவல் அறிக்கையை புலன்விசாரணைக்காக எனக்கும் நீதிமன்றத்திற்கும் அனுப்பிவைத்தார்.**(முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

3) நான் 01.02.2016 ம் தேதி முதல் தகவல் அறிக்கையை பெற்று நான் மாலை 18.00மணிக்கு சம்பவ இடமான ஈரோடு கரூர் ரோடு கொல்லம்பாளையம் கார்மல் பள்ளி அருகே சென்று சாட்சிகள் ரமேஷ் மற்றும் துரைராஜ் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து கையொப்பம் பெற்றேன். **(மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. )**

VANJI NATHAN R Digitally signed by VANJI NATHAN R Date: 2025.11.20 18:43:39 +0530

4) ஈரோடு அரசு மருத்துவமனை சென்று சவக்கிடங்கில் இருந்த முனுசாமியின் பிரேதத்தின் மீது பஞ்சாயத்தார் மற்றும் சாட்சிகள் முன்னிலையில் பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்தேன். **(பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.5ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** பிரேதத்தை இறப்பின் உண்மை காரணம் அறியும் பொருட்டு தலைமை காவலர் 1910 ராமசந்திரன் அவர்கள் மூலம் பிரேத பரிசோதனை வேண்டுகோள் கடிதம் கொடுத்து அனுப்பினேன்.

5) சாட்சிகள் முருகன், செந்தில்குமார், பரமேஷ்வரி, முத்தம்மாள், சாரதா, நிரஜ்சன், மணிகண்டன், ரமேஷ், துரைராஜ் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கின் எதிரி ஆனந்தன் த/பெ.முருகையன் தஞ்சாவூர் என்பவரை 01.02.2016 ம் நிலையத்தில் வைத்து கைது செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். 01.02.2016 அன்று இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட ஸ்கூட்டர் TN 28 AF 0857 என்ற பதிவெண் உள்ள வண்டியை வாகன பரிசோதனைக்காக மோட்டார் வாகன ஆய்வாளர் அவர்களுக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்து அனுப்பினேன்.

6) மோட்டார் வாகன ஆய்வாளரிடம் ஆய்வறிக்கை பெற்று ஆய்வாளர் ராஜேந்திரனை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். **(TN 28 AF 0857 வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** அரசு மருத்துவமனை மருத்துவர் திரு.ஆனந்தகுமார் என்பவரிடம் பிரேத பரிசோதனை அறிக்கை பெற்று விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். **(பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ. 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது. )**

7) புலன்விசாரணையை முடித்து எதிரி ஆனந்தன் மீது சட்டப்பிரிவுகள் 279, 304(A) இதசவின் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

1) 31.01.2016 ம் தேதி இவ்வழக்கின் புகார்தாரர் முருகன் கார்மெல் பள்ளியின் அருகில் உள்ள ஆட்டோ ஸ்டான்டில் நானும் எனது நண்பர்களும் நின்று பேசிக்

VANJI NATHAN R
Digitally signed by VANJI NATHAN R
Date: 2025.11.20 18:43:44 +0530

கொண்டிருந்ததாக தான் குறிப்பிட்டுள்ளார் என்றாலும், ரோட்டின் இடது புறமாகவா, வலது புறமாகவா என குறிப்பிட்டு கூறவில்லை என்றாலும் சரிதான். அ.சா.ஆ.1 புகாரில் கார்மெல் பள்ளி அருகே அவரது அப்பா முனுசாமி மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி ரோட்டின் இடதுபுறம் ஓரமாக வந்து சரஸ்வதி டீ ஸ்டால் அருகே ரோட்டை கடக்க ரோட்டின் ஓரமாக வந்து கொண்டிருந்ததாக கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். அ.சா.ஆ.1 புகாரில் தானும் மருத்துவமனைக்கு கொண்டு சென்றதாக தான் கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். மாதிரி வரைபடத்தில் கிழமேல் ரோட்டில் ஈரோடு – கரூர் செல்லும் ரோட்டின் வலது புறமாக விபத்து நடந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஈரோடு – கரூர் போகும் ரோட்டில் இடதுபுறமாக நடந்து சென்றவர் மீது கரூரிலிருந்து ஈரோடு நோக்கி வந்த வாகனத்தின் இடது பகுதி மோதுவதற்கு உண்டான வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. ஈரோடு – கரூர் ரோட்டில் கார்மெல் பள்ளி முன்பாக டிவைடர் உள்ளது என்றால் அந்த சமயத்தில் டிவைடர் இல்லை. கார்மெல் பள்ளியின் மெயின் கேட் ஈரோடு – கரூர் சாலையில் மெயின் ரோட்டில் உள்ளது என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் பேருந்து நிறுத்தம் என்றால் அருகில் பேருந்து நிறுத்தம் உள்ளது. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் ஜன நடமாட்டம் மற்றும் வாகன போக்குவரத்து அதிகமுள்ள இடம் என்றால் சரிதான். கார்மெல் பள்ளி மெயின் கேட்டிற்கு முன்பாக இடதுபுறமும் வலதுபுறமும் வேகத்தடை உள்ளது என்றால் சரிதான். சம்பவத்தில் ஈடுபட்டதாக சொல்லப்படும் வாகனம் 24 சக்கரங்கள் கொண்ட கனரக வாகனம் என்றால் சரிதான். சம்பவ சமயத்தில் வாகனத்தில் அனுமதிக்கப்பட்ட அளவில் சிமெண்ட் லோடு இருந்தது என்றால் சரிதான். 24 சக்கரங்கள் கொண்ட கனரக வாகனத்தில் லோடு இருந்த நிலையிலும் சம்பவ இடத்தின் முன்பு வேகத்தடை இருந்த நிலையிலும் வாகனம் வேகமாக செல்வதற்கு வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. விபத்திற்கும் எதிரிக்கும் எந்த சம்மந்தமும் கிடையாது என்றாலும், அ.சா.1 க்கு இழப்பீடு கிடைக்க வேண்டும் என்பதற்காக புகார் பெறப்பட்டு பொய்யாக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. நான் சொன்ன நாள், இடம், நேரத்தில் எதிரியை கைது செய்யவில்லை என்றாலும், சொன்ன நாள், இடம், நேரத்தில் சாட்சிகளை விசாரிக்கவில்லை என்றாலும், வழக்கிற்காக வேண்டி ஆவணங்கள் அனைத்தும் காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. விபத்து நடந்த இடமாக சொல்லப்படும் ஈரோடு – கரூர் சாலையில்

VANJI NATHAN R
Digitally signed by VANJI NATHAN R
Date: 2025.11.20 18:43:48 +0530

15 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே டிவைடர் இருந்து வருகிறது என்றாலும், வழக்கிற்காக டிவைடர் இல்லை என பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

Taken Down Before Me and Typed By the Typist in Open Court Read Over/ Interpreted to the witness/deponent and Admitted by the witness/deponent to be correct.

VANJI NATHAN R Digitally signed by VANJI NATHAN R Date: 2025.11.20 18:43:52 +0530

Judicial Magistrate No.I,
Erode.